பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
13 09 2026 SUNDAY 7 15 PM ஆகாஷவாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- புதுதில்லி பிரிக்ஸ் உச்சிமாநாடு, இந்த அமைப்பின் வலிமையை உலகிற்கு உணர்த்தியுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- இந்தியாவின் அறிவாற்றல், ஒட்டுமொத்த உலகிற்கும் வழிகாட்டுவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா கூறியுள்ளார்.
- சமூகநலத் திட்டங்களின் மூலம், நாடு முழுவதும் 2 லட்சத்து 88 ஆயிரத்திற்கும் அதிகமான மூத்த குடிமக்கள் பயனடைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- ஏமன் அரசு படையினரால் சிறை வைக்கப்பட்டிருந்த தங்களது அமைப்பைச் சேர்ந்த 210 பேரை மீட்டுள்ளதாக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.
- ஆசிய கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று இலங்கையை எதிர்கொள்கிறது.

>>>>>>>><<<<<<<

புதுதில்லியில் நடைபெற்ற பிரிக்ஸ் உச்சிமாநாடு, இந்த அமைப்பின் வலிமையை உலகிற்கு உணர்த்தியுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற இம்மாநாட்டில் பங்கேற்ற ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டின் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன், இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து, பிரதமர் பேச்சு நடத்தினார்.

பாரத் மண்டபத்தில் இன்று, எகிப்து, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் நாடுகளின் தலைவர்களுடன், பரஸ்பர நலன் சார்ந்த இருதரப்பு ஒத்துழைப்புகளை அதிகரிப்பது குறித்து, திரு.நரேந்திர மோடி பேச்சு நடத்தினார்.

பிராந்திய மற்றும் சர்வதேச நிலவரம் குறித்தும், இந்த சந்திப்புகளின்போது விவாதிக்கப்பட்டது.

இதுகுறித்து, பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பிரிக்ஸ் உச்சி மாநாடு வெற்றிகரமாக நடைபெற ஒத்துழைத்த உறுப்பு நாடுகளின் தலைவர்கள் மற்றும் பன்னாட்டு அமைப்புகளின் நிர்வாகிகளுக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு உணர்வு மற்றும் முன்னேற்றத்தை மேலும் முன்னெடுத்துச் செல்வோம் என்றும் திரு.நரேந்திர மோடி அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>><<<<<<<

பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் புதுதில்லி பிரகடனத்தில், ஆயுஷ் மருத்துவத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருப்பது, வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று, இத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த அங்கீகாரம் மூலம், பாரம்பரிய மருத்துவ முறைகளை மேலும் முன்னெடுத்துச் செல்லவும், உலகளாவிய ஒத்துழைப்புகளை வலுப்படுத்த உதவும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பாரம்பரிய மற்றும் ஒருங்கிணைந்த மருத்துவத்திற்கென பிரிக்ஸ் நிபுணர் குழுவை அமைக்கும் முடிவு, உறுப்பு நாடுகள் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், ஆராய்ச்சிகளை மேம்படுத்தி, ஆதாரப்பூர்வ அணுகுமுறைகளைப் பின்பற்றவும் உதவும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அறிவியல்பூர்வ ஆராய்ச்சி, தர உத்தரவாதம், சர்வதேச ஒத்துழைப்புகள் வாயிலாக, ஆயுர்வேத மருத்துவத்தை ஊக்குவிக்க இந்தியா உறுதி பூண்டுள்ளதாகவும் திரு. பிரதாப்ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

இந்தியாவின் அறிவாற்றல், ஒட்டுமொத்த உலகிற்கும் வழிகாட்டுவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா தெரிவித்துள்ளார்.

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, Asiatic Society அமைப்பினரால் மும்பையில் நடத்தப்படும் சிறப்புக் கண்காட்சியைத் தொடங்கிவைத்துப் பேசிய அவர், பல்வேறு அன்னியப் படையெடுப்புகளையும் கடந்து, நாட்டின் தனித்துவமிக்க அடையாளமும், கலாச்சார செழுமையும் சிறந்த முறையில் பாதுகாக்கப்பட்டு வருவதாகக் கூறினார்.

நாட்டின் வரலாறு, கலாச்சாரம், மொழி, தொன்மைவாய்ந்த ஆவணங்கள் மற்றும் பாரம்பரிய நடைமுறைகளை அந்நியர்களிடம் அடிமைப்பட்டுவிட ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

Asiatic Society அமைப்பால் பராமரிக்கப்பட்டு வரும் அரிய வரலாற்றுக் குறிப்புகள் மற்றும் ஆவணங்களை, நாட்டு மக்கள் அனைவரும் பயன்படுத்தும் வகையில், நவீன தொழில்நுட்பங்களைப் பின்பற்ற வேண்டும் என்றும் திரு.அமித் ஷா கேட்டுக் கொண்டார்.

>>>>>>><<<<<<<

*நாட்டின் சரக்குப் போக்குவரத்து கடந்த ஆகஸ்ட் மாதத்தில் 5 புள்ளி 4 சதவீதம் அதிகரித்துள்ளதாக ரயில்வே அமைச்சகம் கூறியுள்ளது.*

*இதுகுறித்து, அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில், 130 புள்ளி 9 மில்லியன் டன் சரக்குகள், ரயில் மூலம் எடுத்துச் செல்லப்பட்ட நிலையில், இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 137 புள்ளி 9 மில்லியன் டன் எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*குறிப்பாக, இரும்புத் தாது, நிலக்கரி, எஃகு பொருட்கள், உரம் மற்றும் எண்ணெய் உள்ளிட்டவை, அதிகளவில் ரயில்கள் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.*

*இதன் காரணமாக, சரக்குப் போக்குவரத்து மூலம் கிடைக்கும் வருவாயும், கடந்த ஆண்டைவிட 6 புள்ளி இரண்டு ஏழு சதவீதம் அதிகரித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.*

*இதேபோன்று, பயணிகள் போக்குவரத்தும், வெகுவாக அதிகரித்துள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதம் மட்டும் 67 கோடியே 27 லட்சம் பயணிகள், ரயில்களில் பயணம் செய்துள்ளனர்.*

*புறநகர் ரயில்களில் மட்டும், பயணிகள் போக்குவரத்து சுமார் 9 சதவீதம் அதிகரித்துள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.*

>>>>>>><<<<<<<

*மத்தியப் பிரதேசத்தில் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மின்சார ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டத்தின் மூலம், இந்த ஆண்டு 7 ஆயிரத்து 500 மின்சார ஸ்கூட்டர்கள் வழங்கப்படவுள்ளதாக, அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.*

*முதலமைச்சரின் ஸ்கூட்டர்கள் திட்டத்தின்கீழ், நாளை மறுதினம் போபாலில் நடைபெறும் மாநில அளவிலான நிகழ்ச்சியில், இவை வழங்கப்பட உள்ளது.*

*அரசுப் பள்ளிகளில் படித்து, பிளஸ்-டூ பொதுத்தேர்வில் தோல்வியடையாமல், 70 சதவீதத்திற்கு குறையாத மதிப்பெண் பெற்ற மாணவர்கள், கல்லூரிகளுக்கு சிரமமின்றி சென்று வரும் வகையில் இந்த மின்சார ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டு வருகிறது.*

*இத்திட்டத்தில், இதுவரை சுமார் 23 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயனடைந்துள்ளதாகவும் மத்தியப்பிரதேச அரசு தெரிவித்துள்ளது.*

>>>>>>><<<<<<<

மத்திய அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு சமூகநலத் திட்டங்களின் மூலம், நாடு முழுவதும் 2 லட்சத்து 88 ஆயிரத்திற்கும் அதிகமான மூத்த குடிமக்கள் பயனடைந்துள்ளதாக, சமூக நீதித்துறை செயலாளர் திரு. சுதான்சு பந்த் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், மூத்த குடிமக்களுக்கென ஊட்டச்சத்துள்ள உணவு, சுகாதார சேவைகள், பொழுதுபோக்கு உள்ளிட்ட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருப்பதுடன், புதிதாக 142 இல்லங்களை கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

மூத்த குடிமக்கள், கண்ணியத்துடனும், சுதந்திரமாகவும் வாழ்வதை உறுதிசெய்யும் விதமாக, இருநூறு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, சுமார் 5 லட்சம் பேர் பயனடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், வறுமைக் கோட்டிற்கு கீழே வசிக்கும் மூத்த குடிமக்களுக்கு, சக்கர நாற்காலிகள், காதுகேட்கும் கருவிகள், ஊன்றுகோல், மூக்குக் கண்ணாடி போன்றவையும் வழங்கப்பட்டுள்ளதாக திரு. சுதான்சு பந்த் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

ஜார்க்கண்ட் மாநிலம், தன்பாத் மாவட்டத்தில் நேரிட்ட சுரங்க விபத்தில் 3 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

அப்பகுதியில் சட்டவிரோதமாக நிலக்கரியை வெட்டியெடுக்கச் சென்றபோது, சுரங்கத்தின் மேல்பகுதி சரிந்து விழுந்து, இந்த விபத்து நேரிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அருகில் உள்ள கிராம மக்கள் விரைந்து வந்து, மீட்புப் பணியில் ஈடுபட்ட போதிலும், இடிபாடுகளில் சிக்கி 3 பேர் உயிரிழந்து விட்டதாகவும், எஞ்சியவர்களை மீட்கும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இப்பகுதியில் கிடைக்கும் நிலக்கரியை, சிலர், அனுமதியின்றி வெட்டியெடுத்து, அருகிலுள்ள சந்தைகளில் விற்பனை செய்து வருவதாகவும், இதுகுறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும், காவல்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

>>>>>>><<<<<<<

இந்தியா-கம்போடியா இடையிலான கடல்சார் ஒத்துழைப்புகளை வலுப்படுத்தும் நோக்கில், இந்திய கடற்படைக் கப்பலான I N S Kulish, கம்போடியாவின் Ream கடற்படைத் தளத்தை சென்றடைந்தது.

இந்தியக் கடற்படைக் கப்பல் ஒன்று இந்த கடற்படை தளத்திற்கு செல்வது, இதுவே முதன்முறை என்ற நிலையில், இந்தப் பயணம், இருநாட்டு கடற்படைகளுக்கு இடையேயான

கடல்சார் ஒத்துழைப்புகளை மேம்படுத்துவதாக அமையும் என்று, பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியக் கப்பல் கம்போடியாவில் இருக்கும் காலத்தில், இரு நாட்டு வீரர்களும், தங்களது தொழில் ரீதியான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதுடன், விளையாட்டுப் போட்டி, மற்றும் பயிற்சியில் ஈடுபடுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம், இருநாட்டு ராணுவமும், இருவார கால கூட்டுப் பயிற்சியை மேற்கொண்ட நிலையில், I N S Kulish கப்பலின் தற்போதைய பயணம், இந்தோ – பசிபிக் பிராந்தியத்தில், கடல்சார் பாதுகாப்பை விரிவுபடுத்தும் என்றும், பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

ஏமன் அரசு படையினரால் சிறை வைக்கப்பட்டிருந்த தங்களது அமைப்பைச் சேர்ந்த 210 பேரை மீட்டுள்ளதாக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Sanaa-வில் இதனை தெரிவித்த அந்த அமைப்பின் செய்தி தொடர்பாளர், செங்கடல் பகுதியை கைப்பற்றும் தங்களது முயற்சியின் ஒரு பகுதியாக அரசு கட்டுப்பாட்டில் இருந்த சிறைச்சாலையை தகர்த்து, இவர்களை விடுவித்துள்ளதாக கூறினார்.

மேலும், துறைமுக நகரான Mocha-வையும் தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

>>>>>>><<<<<<<

இந்தியா - ஆப்கானிஸ்தான் இடையேயான முதலாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி புதுதில்லியில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

>>>>>>><<<<<<<

ஆசிய கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று இலங்கையை எதிர்கொள்கிறது.

துபாயில் இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

>>>>>>><<<<<<<

தாஷ்கண்டில் நடைபெற்ற சர்வதேச வாள்வீச்சு போட்டியில் இந்தியாவின் Jenisha Naser Raj Viji வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>>>>><<<<<<<

பிலிப்பைன்ஸில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Srija Akula* தங்கப்பதக்கத்தையும், *Ankur Bhattacharjee* வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

*>>>>>>>END<<<<<<<*